OS.No. 86/2018

Date : 20.12.2024

Witness Name & Rank – ராமசாமி - DW1

**சாட்சி அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. நான் சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு மேற்குரிய சொத்து ஆதியில் யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்து கொண்டு தான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்து வாதி ராமசாமி மற்றும் அவரது சகோதர, சகோதரிகளுக்கு கூட்டாக தான் உள்ளது என்றால் சரிதான். ராயக்கவுண்டர் மகன் மற்றும் மகள்களில் வாதி ராமசாமி மட்டும் தான் தற்போது உயிருடன் உள்ளார். இதர நபர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் 1 பகுதியை சின்னியக்கவுண்டர் வாரிசுகள், கருப்பக்கவுண்டர் வாரிசுகள் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் வாரிசுகளிடம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றது 327/1, 327/12, 327/3, 328/1ஜி, 328/1சி, 334/1, 334/2, 334/5, 334/8, 334/18 ஆகிய சொத்துக்கள் தான் என்றால் சரிதான். ராயக்கவுண்டர் வகையராவுக்கு 10 காலை நிலங்களில் சேர்த்து 2.50 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலை நிலங்களில் ராயக்கவுண்டர் வாரிசுகளுக்கு சரியாக 41 1/2 செண்ட் நிலம் உள்ளது என்றால் உள்ளது ஆனால் என்னிடம் விற்ற போது சகோதரிகளுக்கு வேறு நிலங்களை தருவதாக சொன்னார்கள். இதில் சின்னியக்கவுண்டர் வாரிசுகளிடம் இருந்து 82 1/4 செண்ட் நிலம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதே போல் கருப்புசாமி வாரிசுகளிடம் இருந்து 57 1/2 செண்ட் நிலம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதே போல் பழனிசாமி வாரிசுகளிடம் இருந்து 41 1/2 செண்ட் நிலம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

2. காலை எண். 334/1ல் 95 செண்ட் நிலம் ராயக்கவுண்டர் வாரிசுகளுக்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலையில் கருப்பக்கவுண்டர் மகன் ரவிச்சந்திரன் வாரிசுகளடிம் கிரையம் பெற்ற போது 31 செண்ட் நிலத்திற்கு கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கான பட்டா எண். 1562 என்றால் சரிதான். மேற்படி பட்டா எண். 1562ல் அனைத்து ஆண் வாரிசுகள் பெயரிலும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். இது அவ்வாறு இருக்கையில் கூட்டு பொது சொத்தை செக்குபந்தி குறிப்பிட்டு நான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதே போல் தான்

சின்னியக்கவுண்டர் வாரிசுகளிடமும் , பழனிச்சாமி கவுண்டர் வாரிசுகளிடமும் கூட்டு பொது சொத்தை செக்குபந்தி குறிப்பிட்டு வாங்கியுள்ளேன் என்றால் பொதுவில் தான் வாங்கினேன். நான் சொல்வது தவறு என்றும் மேற்படி 22.05.2017ம் தேதியிட்ட பழனிச்சாமி வாரிசுகளிடம் பெற்ற கிரயத்தில் பக்கம் 5ல் செக்குபந்தி தெளிவாக குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அதே போல் நான் கிரையம் பெற்ற அனைத்து சொத்துக்களும் குறிப்பிட்ட செக்குபந்தி சொல்லி தான் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் பெற்ற சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால் எனக்கு கிரையம் கொடுத்துவர்களுக்கு என்ன பாகம் கிடைக்கக்கூடியதோ அது மட்டுமே எனக்கு உரிமை என்றால் சரியல்ல. மத்த பாகஸ்தர்கள் சம்மத கடிதமோ அல்லது விடுதலை பத்திரமோ கொடுக்காததால் நான் கிரையம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல.

3. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு அருகாமையில் எனது மில் உள்ளது என்றால் 1000 அடி தொலைவில் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் காலை எண். 334/1 நிலத்தில் நான் பெற்ற கிரையத்தில் மிக தெளிவாக ராமசாமி என்ற எனது நிலத்திற்கு வடக்கில் எனது செக்குபந்தி குறிப்பிட்டுள்ளதால் எனது மில் அருகாமையில் தான் உள்ளது என்றால் சரியல்ல. கூட்டுக்குடும்ப சொத்தில் அதன் அங்கத்தினர்கள் விடுதலை பத்திரமோ அல்லது சம்மத பத்திரமோ கொடுக்காத வரை அவரது பாகம் உள்ளது என்பதாலும் மேற்படி நான் கிரையம் பெற்ற சொத்துக்கள் அனைத்து விலை மதிப்பு அதிகம் உள்ள சொத்துக்கள் என்பதாலும் மற்ற பாகஸ்தர்களுக்கு வேறு இடத்தில் நிலம் கொடுப்பதாக சொல்லியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற 334, 327 ஆகிய காலை நிலங்கள் அருகிலேயே உள்ளது என்றால் சரிதான். இதில் இல்லாமல் இந்த குடும்பத்திற்கு சொந்தமான வேறு காலை எண். 672, 680, 682 ஆகிய நிலங்களில் கூட்டுக்குடும்பத்திற்கு 1.50 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே நான் கிரையம் பெற்ற சொத்துக்களில் பாகஸ்தர்களுக்கு கிடைக்கக்கூடிய பாகங்களை விட அதிகமான விஸ்தீரணத்திற்கு கிரையம் பெற்றுள்ளதால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனவே எனது கிரையப்பத்திரப்படி எனக்கு பாகம் கிடைக்கக்கூடியதல்ல எனக்கு கிரையம் கொடுத்தவர்களுக்கு அந்தந்த நிலங்களில் எவ்வளவு பாகம் கிடைக்கக்கூடியதோ அதை பொறுத்து நான் உரிமை கோர முடியும் என்றால் சரியல்ல. வாதி ராயக்கவுண்டரின் வாரிசு என்ற அடிப்படையில்

அவருக்கு ஒவ்வொரு காலைகளிலும் என்ன பாகம் கிடைக்கக்கூடியதோ அதை பெற அவர் தகுதியுடையவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.<br><br>(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,<br><br>சார்பு நீதிபதி, பல்லடம். |